DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

------------------------------------------------------------------------

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.308/2024**

**P.W.2**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | மகாலெட்சுமி |
| Husband Name | : | மனோகர் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.01.2026.
( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

<u>**அரசு தரப்பில் முதல் விசாரணை :**</u>

நான் சமயநல்லூர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து தற்போது விட்டோடியாக இருந்து வருகிறேன். கடந்த 13.08.2022ம் தேதி நான் நாகமலை புதுக்கோட்டை காவல்நிலையத்தில் பெண் காவலராக பணிபுரிந்த போது **அ.சா.1** தலைமை காவலர் பாண்டியராஜன் மற்றும் **சாட்சி எண்.5** சார்பு ஆய்வாளர் கணேஷ்குமார் ஆகியோர்கள் காவல்நிலைய எல்கைக்குட்பட்ட கொடிமங்கலம் அரசு மேல்நிலைபள்ளி அருகே பணியில் இருந்த போது, பள்ளி அருகே எதிரி வெள்ளைத்தாய் என்ற ஒரு பெண் அங்கு நின்று கொண்டிருந்தார். நாங்கள் வருவதை பார்த்து எதிரி அங்கிருந்து தள்ளி சென்றாார். அவர் கையில் ஒரு பை வைத்திருந்தார். எதிரியை கூப்பிட்டு அவர் பையை பார்த்த போது அவர் பையில் 23 கூல் லிப் பாக்கேட் மற்றும் கணேஷ் புகையிலை பாக்கெட் 20 மற்றும் ரூ.930/- ஆகியவற்றை வைத்திருந்தார். எதிரியிடமிருந்து சார்பு ஆய்வாளர் அவர் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அத்தாட்சியில் 23 கூல் லிப் பாக்கேட் மற்றும் கணேஷ் புகையிலை பாக்கெட் 20 மற்றும் ரூ.930/- ஆகியவற்றை

கைப்பற்றினார். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2ம் கையொப்பம் என்னுடையது தான், அந்த கையொப்பம் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அத்தாட்சியில் கண்டுள்ள 2ம் கையொப்பம் என்னுடையது தான், அந்த கையொப்பம் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

நாங்கள் ரோந்து பணிக்கு செல்லும் காவல்நிலைய பொது நாட்குறிப்பில் குறிப்பு செய்தோமா என்று எனக்கு ஞாபகமில்லை. எதிரியை கைது செய்த இடமானது ஆட்கள் நடமாட்ட பகுதி என்றால், சரிதான், ஆட்கள் இரு சக்கரவாகனத்தில் சென்று வருவார்கள். அத்தாட்சியில் நான் தேதி குறிப்பிட்டு கையொப்பம் செய்யவில்லை. நாங்கள் ரோந்து பணிக்கு செல்லும் போது சார்பு ஆய்வாளரும், தலைமை காவலரும் ஒரு இருசக்கர வாகனத்திருலும், நான் தனியாக என்னுடைய இருசக்கர வாகனத்திலும் சென்றோம். எதிரியை கைது செய்து ஆட்டோவில் காவல்நிலையத்திற்கு அழைத்து வந்தோம். பணி சம்மந்தமாக நான் என்னுடைய பாக்கெட் டைரியை காவல் ஆய்வாளரின் விசாரணையின் போது ஒப்படைக்கவில்லை. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து எதிரியை கைது செய்யவில்லை என்றும், எதிரியிடமிருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்பவ ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான், ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.01.22 15:22:56 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.